(அ) மதுரை நகரின் வளர்ச்சிப் பணிகளுக்கு உலக வங்கியிடம் இருந்து நிதி உதவிகள் பெறும் நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளது?

(ஆ) எப்போது பணிகள் தொடங்கப்பெறும்?
(இ) என்னென்னப் பணிகள் தொடங்கவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன், மதுரை மாநகராட்சியில் திட்டப்பணிகளுக்கான அறிக்கைகள் தயார் செய்ய, கலந்தாய்வாளர்கள் (Consultants) நியமிக்கப்பட்டுள்ளனர். கலந்தாய் வாளர்களால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையில் பல்வேறு திட்டப்பணிகள், ரூ. 1,715 இலட்சம் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பனைத் தொழில் வாரியம்

***3495 திரு. மா. சுந்தரதாஸ் :**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பனைத் தொழிலாளர் நலன் கருதி பனைத் தொழில் வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து, அது அமைக்கப்படுகின்ற காலத்தைப் பற்றி நிர்ணயம் செய்யப்படும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன் பிடிக்கப் போகிறார்களோ அப்படித்தான் பனைத் தொழிலாளர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பனை ஏறுகிறார்கள். ஆகவே அவர்களைப் போல இவர்களையும் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்து அவர்களையும் முன்னுக்குக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் இந்த அரசு அந்தப் பணிகளைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையிலிருந்து பல்வேறு விதமான பொருட்கள் பெறப்பட்டு பல்வேறு விதமான தொழில்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பனை ஓலையிலிருந்து பனைத் தடி வரை அனைத்துப் பொருட்களுமே அந்தத் தொழில் மூலம் விரிவுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருப்பதால் விரைவிலேயே பனைத் தொழில் வாரியம் ஒன்றை அமைத்து அந்தப் பனைத் தொழில் மூலமாகக் கிடைக்கின்ற பொருட்களை அடக்கமாக உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் அதில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கும் உடனடியாக அந்த வாரியம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் 1,131 ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் மாவட்ட அளவில் 5 சம்மேளனங்களும் மாநில அளவில் ஒரு பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை நிலையமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் மூலமாக பனை மரங்கள் ஏராளமாக இருக்கிற பல்வேறு மாவட்டங்களில் பனைப் பொருட்களை உற்பத்தி செய்கிற பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. தனியாக ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. அதற்கான கூடுதல் செலவு 3 கோடி ரூபாய் ஆகும் என்று துறை கருதுகிற காரணத்தால் அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து இந்தத் திட்டம் எப்போது துவங்கும் என்பது நிர்ணயம் செய்யப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

பட்டின் தரம்.

*3513 **திரு. இரெ. இராசமாணிக்கம் :**

மாண்புமிகு சமுகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு பட்டு, இணையம் (டான்சில்க்)மூலம் வழங்கப்படும் பட்டு தரம் குறைவாக உள்ளது குறித்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?